விடுநர்

திரு. K.வெங்டேசன்.,
ஆணையர்,
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்.

பெறுநர்

ஊராட்சி தலைவர்
வெள்ளவேடு ஊராட்சி.
பூவிருந்தவல்லி ஒன்றியம்.

ந.க.எண். 0670/2024/அ3 நாள்: 06.03.2024.

பொருள் : மனைப்பிரிவு – பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் – வெள்ளவேடு ஊராட்சி, ச.எண்: 68/1B, 1C1 & 69/2A1 -ல் மனைப்பிரிவு அமைக்க அங்கீகரித்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினால் திட்ட அனுமதி ஒப்பளிக்கப்பட்டது – இறுதி அனுமதி வழங்குதல் – சார்ந்து.

பார்வை : உறுப்பினர் மற்றும் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் கடித எண் Layout-1/0221/2023, நாள்.21.02.2024.

––*–*–*

பார்வையில் காணும் உறுப்பினர் மற்றும் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம் அவர்களின் கடிதத்தின்படி வெள்ளவேடு ஊராட்சி, ச.எண்: 68/1B, 1C1 & 69/2A1 -ல் Regular Plots 19 Convenience shop 1 மனைகள் அமைக்க PPD/LO.No:36/2024-ன் படி சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் திட்ட அனுமதி வழங்கப்பட்டது. கீழ்குறிப்பிட்டுள்ள ஒன்றிய கட்டணங்கள் நிபந்தனைகளுக்குட்பட்டு வசூலிக்கப்பட்டுள்ளது. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தினால் திட்ட வரைபட அனுமதியில் குறிப்பிட்டுள்ள உரிய விதிகளுக்குட்பட்டு இறுதி அனுமதி வழங்க ஊராட்சி மன்ற தலைவர், வெள்ளவேடு ஊராட்சி அவர்களுக்கு அனுப்பப்படுகிறது.

S.No	Details of Head Taken	Name of Bank / DD No & Date	Amount (RS)
1	Commissioner,Poonamallee, Panchayat Union.	E- Challan 20240306017300 Date 06.03.2024	26000
2	Flag Day	Online Payment www.flagday.tn.gov.in FD/Fund/20279 Dt.06.03.2024	13000

நிபந்தனைகள்

1. மனைகள் மற்றும் தெருக்கள் அங்கீகரிக்கப்பட்ட வரைபடம், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் நிபந்தனைகளின்படி எல்லைக்கற்களால் வரையறுக்கப்படவேண்டும். மனைப்பிரிவிற்குள் வரும் தெருக்கள் அனைத்தும் சரளைக்கற்களைக் கொண்டு, மனுதாரர் நிர்வாக அதிகாரியினால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும் அகலத்திற்கும் அமைக்கப்பட்டதனை உறுதி செய்துக்கொண்டு அதன் பின்னரே அனுமதி வழங்கப்பட வேண்டும்.
2. தகுந்த சிறுபாலங்கள் சாக்கடை வடிகால், துப்புரவு, தெருவிளக்கு முதலிய வசதிகளும் மனுதாரர் அமைத்து தரவேண்டும். மனையின் அளவுகளில் அமைப்பில் மாற்றங்கள் செய்வதோ அல்லது வரையறுக்கப்பட்ட பொது உபயோகத்திற்கான இடங்களில் மாறுதல் செய்வதோ கூடாது.
3. தெரு மனையில் அமையும் மனைகளில் மூலைகளில் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தின்படி திருப்பத்தோடு அமைக்கப்படவேண்டும்.

D:\A3\Letter\Layout\vellavedu srivari.doc

For M/S SHREEVAARI PROMOTERS

Proprietor

4. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் விடப்பட்டுள்ள எந்த ஒரு மனையையும் பொது காரியங்களுக்காக பிரித்து காட்டப்பட்டுள்ள மனைகள் தவிர குடியிருப்பு வீடு கட்டுவதற்கு மட்டுமே பயன்படுத்த வேண்டுமல்லாது கடை, பண்டகசாலை மற்றும் குடியிருப்பு அல்லாத குடியிருப்பைச் சொந்த உபயோகத்திற்கல்லாத கட்டிடம் கட்டுவதற்கு பயன்படுத்தக் கூடாது.
5. எந்த ஒரு மனையிலும் தனித்தொரு குடியிருப்பு மட்டுமே கட்டப்பட வேண்டும். தவிர எக்காலத்திலும், தனிப்பட்ட மனைகளில் அங்கீகரிக்கப்பட்ட அளவுகளையோ, அமைப்பை மாறுபடுத்தும் வகையில் எந்த மனையையும் திருத்தி அமைப்பதோ உட்பிரிவளிப்பதோ மாறுபட்ட உபயோகத்திற்கோ பயன்படுத்தக் கூடாது.
6. அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள தெருக்களுக்கு கட்டிட வரம்பு 10 அடிக்கு குறையாமல் இருக்க வேண்டும் மனையின் எல்லைக்குள் கட்டிட வரம்பிற்குட்பட்ட நிலப்பகுதியின் தெருவில் உயர் மட்டத்தில் இருந்து 5 அடி உயரத்திற்கு மேற்படாத சுற்றுச்சுவர் அல்லது வேலி தவிர வேறு எந்த கட்டிடமோ சுவரோ கட்டக்கூடாது.
7. மனையின் பின்புற எல்லைக்குள் கட்டத்திற்கும் இடையில் மனையில் மொத்த அகலத்திற்கும் வியாபிக்கின்ற வகையில் குறைந்தது 5 அடி அளவு உள்ள திறந்த வெளி இருக்கவேண்டும். இந்த பின்பக்க திறந்த வெளியில் கிணறு, மல அறை, எருக்குழி, மாட்டுத் தொழுவம், உந்துவண்டி நிறுத்த கொட்டகை போன்றவை அல்லது அவை போன்ற குடியிருப்பு அல்லாத ஆனால் குடியிருப்பு சார்ந்த கட்டிடங்கள் மட்டுமே அனுமதிக்கலாம். ஆனால், அக்கட்டிடங்கள் மொத்தமான பின் எல்லையில் நிலத்தின் மூன்றில் ஒரு பாகத்திற்கு மேற்பட்ட மனையின் பின்பக்க மட்டத்திலிருந்து 12 அடி உயரத்திற்கும் மேற்படாமல் இருக்க வேண்டும்.
8. மனையின் பரப்பின் 75 சதவீதத்திற்கும் மேல் கட்டிடம் கட்டக்கூடாது.
9. கடக்கால் போடத் தேவையான அளவிற்கு அதிகமாக தரையை சமப்படுத்தவேண்டும். நிலச்சரிவை நேர்செய்யவோ மனையிலிருந்து மண்தோண்டி எடுத்து பள்ளங்கள் ஏற்படுத்தக் கூடாது.
10. மனையின் சொந்நதக்காரர்கள் மேற்படி வீடு கட்டும் திட்டங்களுக்கு உட்படுவதாக எழுத்து மூலமாக சம்மந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரியிடம் ஒப்பந்தம் செய்துக் கொள்ள வேண்டும், மனைகள் விற்பவரையும் மற்றும் வாங்குபவரையும் கட்டுப்படுத்தும் வகையில் கட்டுத் திட்ட விற்பனைப் பத்திரங்கள் பகுதியாக சேர்க்கப்படவேண்டும்.
11. அங்கீகரிக்கப்பட்ட மனைபிரிவு வரைபடம் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.
12. மனைப்பிரிவு ஒப்புதலுக்கான கட்டணம் பெற்றுக்கொண்டு ஒப்புதல் அளிக்க ஊராட்சி மன்ற தலைவர் வெள்ளவேடு ஊராட்சி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.
13. சாலை வசதி குடிநீர் வசதி மற்றும் மின்சார வசதிக்குரிய அனைத்து கட்டமைப்புகளையும் இந்த மனைப்பிரிவு உரிமையாளர் செய்து தர வேண்டும். அதை வெள்ளவேடு ஊராட்சி மன்ற தலைவர் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.
14. ஒப்புதல் அளிக்கப்படும் இந்த வரைபட அனுமதிக்கு சென்னை பெருநகர வளர்ச்சி குழும வரைபடத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள I முதல் III வரையிலான நிபந்தனைகள் அனைத்தும் தவறாமல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதை உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கிட ஊராட்சி மன்ற தலைவர், வெள்ளவேடு ஊராட்சி அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.
15. தவறும்பட்சத்தில் உள்ளாட்சி அமைப்பின் மூலம் வழங்கப்படும் மனைப்பிரிவு இறுதி அங்கீகாரம் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி ரத்து செய்யப்படும்.
16. L.T. Line மனைகளின் குறுக்கே உள்ளதை எடுப்பதற்கும் அல்லது மாற்றி அமைப்பதற்கு TNEB- க்கு பணம் செலுத்தப்பட வேண்டும். அப்பணி முடிவுற்றதா என்பதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.

For M/S SHREEVAARI PROMOTERS

Proprietor

17. H.T. Line-க்கு கீழ் மனைகற்கள்/மனைகள் அமைத்தல் கூடாது காலியாக இருக்கவேண்டும் அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.
18. பூங்காகள் TNEB-க்கு ஒதுக்கிய இடம் Public Purpose Area ஊராட்சிக்கு ஒதுக்கப்பட்டஇடங்கள் ஊராட்சிக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர வேண்டும்.
19. ஊராட்சியில் முறையாக தீர்மானம் ஒப்புதல் பெற்று ஊராட்சிக்கு இறுதியாக செலுத்தப்பட வேண்டிய உரிய கட்டணங்கள் வசூலித்து மனைபிரிவு ஒப்புதல் வழங்குமாறு தெரிவிக்கப்படுகிறது.
20. பொதுபணித்துறை மூலம் வரைபட்த்தில் தெரிவித்துள்ளவாறு நிபந்தனைகளை பின்பற்றப்பட வேண்டும்.
21. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் 0.6m மழைநீர்கால்வாய் அமைக்கப்படவேண்டும் வெள்ளவேடு ஊராட்சி மன்ற தலைவர் அதை ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.
22. இந்த மனையில் (PWD Chanal) பொதுபணித்துறை கால்வாய்கள் இருப்பின் அதனை பரமாரிக்கப்பட வேண்டும். வெள்ளவேடு ஊராட்சி மன்ற தலைவர் ஊர்ஜிதம் செய்து கொள்ள வேண்டும்.
23. வரைபடத்தில் உள்ளபடி சாலைகள் அனைத்தும் தார்சாலைகள் அமைக்கபடவேண்டும்.
24. வரைபடத்தில் உள்ளபடி சாலையோரம் தெருவிளக்கு மின்கம்பங்கள் நடப்படவேண்டும்.
25. அடிப்படை வசதிகளான சாலைகள், குடிநீர் விநியோகம், கழிவு நீர் வடிகால்வாய் மற்றும் தெருமின்விளக்குகளுக்கான மின் இணைப்பு இருக்க வேண்டும். அனைத்தும் சம்பந்தப்பட்ட உரிமையாளரால் பணிகள் செய்து முடித்து தரப்படவேண்டும் அல்லது அதற்கான மதிப்பீடுகள் தயாரித்து கட்டணங்கள் வங்கி வரைவோலைகள் மூலம் வெள்ளவேடு ஊராட்சிக்கு செலுத்தியப்பின் ஊராட்சி தீர்மானம் ஒப்புதல் பெற்று ஊராட்சி இறுதி ஒப்புத அளிக்கப்படவேண்டும்.
26. அடிப்படை வசதிகளுக்கான பணிகள் முடிக்காமல் வரைபட அனுமதி ஊராட்சியால் அளிக்கப்பட்டால் அதற்கான முழு பொறுப்பு / வழக்குகள் / அனைத்தும் 1994 ஊராட்சிகள் சட்டம் ஊராட்சி செயல்அலுவலர் / தலைவர் என்ற முறையில் கிராம ஊராட்சி மன்றத்தலைவரே இதற்கு முழு பொறுப்பாவார்.

இணைப்பு : மனைப்பிரிவு வரைபடம்.

ஆணையர்
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்

நகல்

1. Thiru. M/s. Shree Vaari Promoters
rep.by D. Ramachandran,
No 3045, 1st Floor, Swaminathan Nagar,
Mount Poonamallee Road, Kattupakkam,
Chennai 600 056.
2. வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), பூவிருந்தவல்லி.

பணிவு நகல்

உறுப்பினர் செயலர், சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம்.
எண் 1, காந்தி இர்வின் சாலை,
எழும்பூர்,
சென்னை – 08.

For M/S SHREEVAARI PROMOTERS

Proprietor

D:\A3\Letter\Layout\vellavedu srivari.doc

வெள்ளவேடு ஊராட்சி மன்றம்

பூவிருந்தவல்லி ஒன்றியம்,
திருவள்ளூர் மாவட்டம் – 600 124

G.துர்கா கோபிநாத் M.B.A., M.Sc.,
ஊராட்சி மன்ற தலைவர்

நாள் : 19/3/2024

பெறுநர் :

Thiru.M/s Shreevaari Garden- Phase II,
Rep.by D.Ramachandran,
No 3045,1st Floor, Swaminathan Nagar,
Mount Poonamallee Road, Kattupakkam,
Chennai 600 056.

பொருள்: மனைப்பிரிவு பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் வெள்ளவேடு கிராமம் சர்வே எண் : 68/1B, 1C1 & 69/2A1 மனைப்பிரிவு அமைக்க அங்கீகரித்து சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தினால் இட்ட அனுமதி ஒப்பளிக்கப்பட்டது – இறுதி அனுமதி வழங்குதல் –சார்ந்து

பார்வை : உறுப்பினர் செயலர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதம் எண் Layout: 1/0221/2023 நாள் 21.02.2024

பார்வையில் காணும் உறுப்பினர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் அவர்களின் கடிதத்தின் படி வெள்ளவேடு கிராமம் சர்வே எண் : 68/1B, 1C1 & 69/2A1, **(Shreevaari Garden- Phase II)** இல் அடங்கிய மொத்தம் மனைகள் எண்ணிக்கை 19+1 கொண்ட குடியிருப்பு மனை PPD/LO.36/2024 ன்படி பிரிவினை அரசு விதிகளின் படி அரசுக்கு செலுத்த வேண்டிய உரிய தொகை மற்றும் வெள்ளவேடு ஊராட்சிக்கு உரிய தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. எனவே மேற்படி மனைப்பிரிவிக்கு அனுமதி அளித்து இதன் மூலம் உத்தரவிடப்பட்டுள்ளது.

நிபந்தனைகள்

1. மனையின் உள்ளே டவர் லைன் செல்லவில்லை
2. மனையின் உள்ளே அரசு புறம்போக்கு ஏதும் இல்லை
3. மனை உரிமம் குறித்து ஆவணங்கள் சரியானவை இல்லை என அறியப்பட்டால் இவ்வுத்தரவு. ரத்து செய்யப்பட்டதாக கருதப்படும்
4. இம்மனை தொடர்பாக ஏதேனும் வழக்கு தொடரப்பட்டால் முன் அறிவிப்பின்றி ரத்து செய்யப்படும்

தலைவர்
வெள்ளவேடு ஊராட்சி
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம்

For M/S SHREEVAARI PROMOTERS

Proprietor

நகல்

1. உறுப்பினர் செயலர் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமம் சென்னை.

Vellavedu Village Panchayat, Poonamallee Block, Tiruvallur District

Miscellaneous Receipt

Receipt Number : 2023-2024/2/14/27/7/14

Date : 18-03-2024 02:10 PM

Name of the Payer : D Ramachandran

Payer Mobile Number : 9841509943

Mode of Payment : Demand Draft

Demand No	Major Head	Minor Head	Receipt Detail	Amount (₹)
56947	Fees	Building Plan approval (Building Plan approval)	shreevaari garden-phase-2 layout	28,500
			Total	28,500

Rupees(₹) :Twenty-Eight Thousand Five Hundred Only

Tax Collector

Executive Authority/
Village Panchayat President
Vellavedu Village Panchayat

*This is Computer Generated Bill. No Signature Required.

Do not waste water, use it economically.

Copy

Vellavedu Village Panchayat, Poonamallee Block, Tiruvallur District

Miscellaneous Receipt

Receipt Number : 2023-2024/2/14/27/7/14

Date : 18-03-2024 02:10 PM

Name of the Payer : D Ramachandran

Payer Mobile Number : 9841509943

Mode of Payment : Demand Draft

Demand No	Major Head	Minor Head	Receipt Detail	Amount (₹)
56947	Fees	Building Plan approval (Building Plan approval)	shreevaari garden-phase-2 layout	28,500
			Total	28,500

Rupees(₹) :Twenty-Eight Thousand Five Hundred Only

Tax Collector

Executive Authority/
Village Panchayat President
Vellavedu Village Panchayat

*This is Computer Generated Bill. No Signature Required

For M/S SHREEVAARI PROMOTERS

D. Ramachandran

Proprietor